Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி




மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | செவ்வாய், அக்டோபர் 06, 2026 | இதழ் 176

# மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளில் இடைத்தேர்தல்; காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை வாக்குப்பதிவு




சென்னை, 06 அக்டோபர் 2026: மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளுக்கான இடைத்தேர்தலையொட்டி நாளை காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. வாக்கு சாவடி மையங்களுக்கு மின்னணு இயந்திரங்களை அனுப்பும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. மேலும் தொகுதி முழுவதும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தனிப்பெரும்பான்மை இல்லாமல் தவெக ஆட்சி நடத்தி வரும் நிலையில், இந்த இடைத்தேர்தலின் வெற்றி தமிழக அரசியல் களத்தில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது. இடைத்தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து பரபரப்புகளுக்கும் விறுவிறுப்புகளுக்கும் பஞ்சமில்லாமல் தேர்தல் பிரசாரம் நடைபெற்றது. வேட்பாளர்கள் மட்டுமல்லாமல் அரசியல் கட்சித் தலைவர்களும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

முதல்வர் விஜய், திமுக தலைவர் மு.க. ஸ்டாலின், அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி, சீமான் என அரசியல் தலைவர்கள் அனைவரும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டனர். நேற்று முன்தினம் மு.க.ஸ்டாலின் மதுராந்தகத்தில் பரப்புரையில் ஈடுபட்டார். கடைசி நாளான நேற்று தாராபுரம் தொகுதியில் முதல்வர் விஜய் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். இந்த இடைத்தேர்தலில் ஆளுங்கட்சியான தவெக, எதிர்க்கட்சியான திமுக, முன்னாள் ஆளுங்கட்சியான அதிமுக, நாம் தமிழர், தவெக அரசுக்கு ஆதரவு தரும் இந்திய கம்யூனிஸ்ட் என 5 முனைப் போட்டி நிலவி வருகிறது.

அதிமுக எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்து விட்டு தவெகவில் சேர்ந்த மரகதம் குமரவேல் மற்றும் சத்தியபாமா முறையே மதுராந்தகம் மற்றும் தாராபுரத்தில் போட்டியிடுகின்றனர். திமுக சார்பில் மதுராந்தகத்தில் பரந்தாமனும், தாராபுரத்தில் சுகன்யாவும் போட்டியிடுகின்றனர். அதிமுக சார்பில் தாராபுரத்தில் பானுமதியும், மதுராந்தகத்தில் முன்னாள் எம்எல்ஏ கணிதா சம்பத்தும் போட்டியிடுகின்றனர். இந்த இடைத்தேர்தலின் பரப்புரை ஓய்ந்துள்ள நிலையில், வாக்காளர்கள் அல்லாத வெளியூரைச் சேர்ந்த அரசியல் கட்சியினர் மற்றும் ஆதரவாளர்கள் அனைவரும் இரு தொகுதிகளையும் விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

மதுராந்தகம், தாராபுரம் தொகுதிக்கு பொது விடுமுறை; தலைமை செயலாளர் உத்தரவு; தமிழக தலைமை செயலாளர் சாய்குமார் வெளியிட்டுள்ள அரசாணையில் கூறி இருப்பதாவது: செங்கல்பட்டு மாவட்டத்திற்கு உட்பட்ட மதுராந்தகம் (தனி) தொகுதி மற்றும் திருப்பூர் மாவட்டத்திற்கு உட்பட்ட தாராபுரம் (தனி) என இரண்டு தொகுதிகளில் நாளை இடைத்தேர்தல் நடைபெறுகிறது. இதையொட்டி இந்த இரண்டு தொகுதியில் இடைத்தேர்தல் நடக்கும் பகுதிகளுக்கு மட்டும் பொது விடுமுறை அளிக்கப்படுகிறது. அதன்படி, இந்த இரு தொகுதிகளின் எல்லைக்குள் அமைந்துள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் பள்ளிகள், கல்லூரிகள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்களுக்கு 6ம் தேதி பொது விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தொகுதிகளில் வாக்காளர்களாக பதிவு செய்து, செங்கல்பட்டு, திருப்பூர் மற்றும் அதன் அண்டை மாவட்டங்களில் பணிபுரியும் தனியார் நிறுவன ஊழியர்களும் தங்களின் ஜனநாயக கடமையை ஆற்ற ஏதுவாக சம்பளத்துடன் கூடிய விடுப்பு வழங்க வேண்டும்.

வாக்காளர் அடையாள அட்டை இல்லையா?, 12 ஆவணங்களை வாக்களிக்க பயன்படுத்தலாம்;

வாக்காளர் அடையாள அட்டை இல்லாதவர்கள் ஆதார் கார்டு, பணி அடையாள அட்டை, வங்கி அல்லது அஞ்சல் கணக்கு புத்தகம், மருத்துவ காப்பீடு ஸ்மார்ட் கார்டு, ஓட்டுநர் உரிமம், பான் கார்டு, ஸ்மார்ட் கார்டு, பாஸ்போர்ட், ஓய்வூதிய ஆவணம், பணியாளர் அடையாள அட்டை, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர் அடையாள அட்டை, மாற்றுத்திறனாளி அடையாள அட்டை உள்ளிட்ட 12 ஆவணங்களை பயன்படுத்தலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அன்பு மற்றும் கருணையின் வடிவமாகத் திகழ்ந்த வள்ளலார் வழியில் தொடர்ந்து பயணிப்போம்: முதல்வர் விஜய் புகழாரம்




சென்னை 06, அக்டோபர் 2026: அன்பு மற்றும் கருணையின் வடிவமாகத் திகழ்ந்த வள்ளலார் வழியில் தொடர்ந்து பயணிப்போம் என்று அவரது பிறந்த நாளில் முதல்வர் விஜய் பதிவிட்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், அருட்பெருஞ்ஜோதியாய், தனிப்பெருங்கருணையாய்த் திகழ்ந்த திருவருட்பிரகாச வள்ளலார் அவர்கள் பிறந்த இந்நன்னாளில், அவரது உயரிய சிந்தனைகளை நினைவுகூர்ந்து போற்றி வணங்குகிறேன்.

பசித்த உயிர்க்கு உணவளிப்பதே இறைப்பணி; சாதி சமய வேறுபாடுகளைக் கடந்து அனைத்து உயிர்களையும் தம்முயிர்போல் நேசிப்பதே சன்மார்க்கம்; ஜீவகாருண்யமே வாழ்வியல் நெறி என்ற வள்ளலார் அவர்களின் உயரிய கொள்கைகள், மனிதநேயத்தின் மாபெரும் விழுமியங்களாகத் திகழ்கின்றன.

உயிர்கள் அனைத்தையும் ஒன்றாகக் கருதி, அன்பு மற்றும் கருணையின் வடிவமாகத் திகழ்ந்த வள்ளலார் அவர்களின் வழியில் தொடர்ந்து பயணிப்போம்! என்று அவர் கூறியுள்ளார்.

# மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தல் ஆட்சி தொடர்ந்திட உங்கள் ஆதரவு தேவை: விஜய் சமூக வலைதளத்தில் பதிவு



சென்னை, 06 அக்டோபர் 2026: மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், ஆட்சி தொடர்ந்திட, மென்மேலும் வலுப்பெற உங்கள் ஆதரவு எப்போதும் தேவை என விஜய் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார். தவெக தலைவரும் முதல்வருமான விஜய் தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்ட பதிவில் கூறியுள்ளதாவது:

கடந்த சட்டமன்றத் தேர்தலில், யாருக்கும் வழங்கிடாத பேரன்பையும், பெருவாரியான வாக்குகளையும் நமக்கு வாரி வழங்கி, வாகை சூடும் வரலாற்றைத் திரும்ப வைத்து, உங்களின் முதல் சேவகனாக என்னை அமர்த்திய உங்களுக்கு என் நன்றிக் கடனைத் திருப்பி அளிக்கும் நேரமிது. உண்மையான மனசாட்சியுள்ள மக்களாட்சியை அமர்த்திய தமிழக மக்கள் அனைவருக்கும் எவ்வளவு நன்றி சொன்னாலும் அது மிகையாகாது.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருப்பது, தமிழக மக்களாகிய உங்கள் தலைமையிலான ஆட்சி! இந்த ஆட்சி தொடர்ந்திட, மென்மேலும் வலுப்பெற உங்கள் ஆதரவு எப்போதும் தேவை. கடந்த 25ம் தேதி மதுராந்தகம் தொகுதியிலும், 30ம் தாராபுரம் தொகுதியிலும் இடைத்தேர்தலுக்காக நாம் பரப்புரை மேற்கொண்டோம். இதனைத் தொடர்ந்து கடந்த 2ம் தேதி மதுராந்தகம் தொகுதியிலும், 4ம் தேதி தாராபுரம் தொகுதியில் வாகனப் பிரசாரம் மேற்கொண்டோம்.

மதுராந்தகம் தொகுதி மரகதம் குமரவேல் மற்றும் தாராபுரம் தொகுதி சத்தியபாமா ஆகியோருக்கு வெற்றிச் சின்னமாம் நமது விசில் சின்னத்தில் உங்களின் பொன்னான ’ாக்குகளை அளிப்பீர்கள் என்பதை இந்த நாடறியும். அதற்காக நான் முன்கூட்டியே உங்களுக்கு என் நன்றியை உரித்தாக்குகின்றேன். தமிழ்நாட்டு மக்களுக்கான முதன்மைச் சக்தியான நாம், மக்கள் நலன்களைக் காப்பதற்காக, எதிலும், எப்போதும் சமரசம் செய்துகொள்ளவே மாட்டோம். லஞ்சம், ஊழலற்ற நேர்மையான நிர்வாகத்துடன் மனசாட்சி உள்ள மக்களாட்சியை இப்போது போலவே எப்போதும் தொடர்வோம். இவ்வாறு அதில் பதவிட்டுள்ளார்.

# flydubai சம்பவத்தை தொடர்ந்து இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகு அவசர உத்தரவு!



சென்னை 06, அக்டோபர் 2026: துபாயிலிருந்து இஸ்ரேலின் டெல் அவீவ் நகருக்கு சென்ற பிளை துபாய் விமானத்தில் ஓமன் நாட்டை சேர்ந்த துணை பைலட் இந்திய தலைமை பைலட்டை தாக்கி விமானத்தை விபத்துக்குள்ளாக முயற்சி செய்துள்ளதை தொடர்ந்து. இஸ்ரேலுக்கு வரும் அனைத்து சர்வேதேச விமானங்களின் பாதுகாப்பு குறித்தும் விரிவான மறு ஆய்வு நடத்த இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு கவுன்சில் தலைவர் சம்முவேல் பெண் எஸ்ராவை நியமித்து வெளிநாட்டு பொது போக்குவரத்துக்கு விமானங்களின் அனைத்து பாதுகாப்பு அம்சங்களையும் ஆய்வு செய்ய அவர் ஆணையிட்டுள்ளார், இஸ்ரேலுடன் எந்தவித தூதரக உறவும் இல்லாத ஓமன் நாட்டை சேர்ந்த ஒரு பைலட் டெல் அவீவ் செல்லும் விமானத்தை இயக்க எப்படி அனுமதிக்கப்பட்டார், என்ற கேள்வி இஸ்ரேலிய ஊடகங்கள் மற்றும் அரசியல் வட்டாரங்களில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த பாதுகாப்பு வீழ்ச்சிக்கு தான் பொறுப்பில்லை என்றும் வெளிநாட்டு விமானங்களின் பாதுகாப்பு மசாத் மற்றும் சென்பெட் ஆகிய உளவு அமைப்பின் கட்டுப்பாட்டில் தான் வருகிறது என்றும் போக்குவரத்து துறை அமைச்சர் மெரி ரேகப் தெரிவித்துள்ளார். இருப்பினும் போக்குவரத்துக்கு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் சிவில் விமான போக்குவரத்து ஆணையமே இதற்கு நேரடி பொறுப்பு என்றும் போக்குவரத்து அமைச்சர் உடனடியாக ராஜினாமா செய்ய வேண்டும், என்று எதிர்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

இதற்கிடையே எதிர்கட்சி தலைவர் யாயீர் லாபிட் நெதன்யாகு அறிவித்துள்ளது, இந்த பாதுகாப்பு மாற ஆய்வு ஒரு போலி விசாரணை என்றும் மிகப்பெரிய வரலாற்று பேரழிவிலிருந்து இஸ்ரேல் தப்பியுள்ள நிலையில் அரசு பொறுப்பற்ற முறையில் செயல்படுவதாகவும் குற்றம் சாட்டியுள்ளார். வரும் அக்டோபர் 27ஆம் தேதி இஸ்ரேலில் தேர்தல் நடைபெற இருக்கு நிலையில் இந்த விமான பாதுகாப்பு வீழ்ச்சி நிதன்யாகு அரசுக்கு பெரிய அரசியல் நெருக்கடியாக உருவாகியுள்ளது.



தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
செவ்வாய்,
அக்டோபர் 06, 2026

## திருப்போரூரில் புதிய பள்ளிப் கட்டிடத்தைத் திறந்து வைத்து, 'வீடுகளைச் சிறந்த இல்லங்களாக மாற்றுதல்' எனும் தனது உயரிய நோக்கத்தை நோக்கி நகரும் வெர்சுனி இந்தியா!

சென்னை 06, அக்டோபர் 2026: உலகின் முன்னணி வீட்டு உபயோகப் பொருள் பிராண்டுகளைக் கொண்ட வெர்சுனி இந்தியா, செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் தொகுதியில் அமைந்துள்ள தையூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் நிறுவனம் சார்பில் புதிதாக கட்டிடம் ஒன்றை திறந்து வைத்துள்ளது. இந்நிறுவனம், "வீடுகளைச் சிறந்த இல்லங்களாக மாற்றுதல்" எனும் தனது உயரிய நோக்கத்தைக் கொண்டு சேர்ப்பதற்கான முயற்சிகளின் ஒரு பகுதியாக இத்திட்டம் மேற்கொள்ளப் பட்டுள்ளது. அனைவரும் பாதுகாப்பாகவும், வசதியாகவும், தங்கள் திறன்களை வளர்த்துக் கொள்ளக் கூடிய இடத்தைப் பெறத் தகுதியானவர்கள் என்ற நம்பிக்கையே இந்த நோக்கத்தின் மையக்கருத்தாகும். பள்ளி உள்கட்டமைப்பில் முதலீடு செய்வதன் மூலம், தையூர் பகுதி குழந்தைகளுக்கு சிறந்த கற்றல் சூழலையும், அவர்கள் வளர்ந்து தன்னம்பிக்கையுடன் எதிர்காலத்தை எதிர் நோக்குவதற்கான நல்வாய்ப்பையும் ஏற்படுத்தித் தர வெர்சுனி இந்தியா முயன்றுள்ளது.

ஐந்தாம் வகுப்பு வரை கல்வி வழங்கும் இப்பள்ளி, முன்பு மிகக் குறைந்த இடவசதி மற்றும் உள்கட்டமைப்புடன் ஒரு சிறிய கூரை போன்ற அமைப்பிலேயே இயங்கி வந்தது. இந்த இடநெருக்கடி கற்றல் சூழலைப் பாதித்ததோடு, கூடுதல் மாணவர்களைச் சேர்ப்பதற்கும் தடையாக இருந்தது. தற்போது புதிதாகக் கட்டப்பட்டுள்ள கட்டிடம் மேம்படுத்தப்பட்ட உள்கட்டமைப்பு மற்றும் கூடுதல் இடவசதியை வழங்குகிறது. இதன் மூலம் சுமார் 100 முதல் 140 மாணவர்கள் வரை கல்வி பயிலும் வகையில் பள்ளியின் மாணவர் சேர்க்கைத் திறன் உயர்ந்துள்ளது.

இக்கட்டிடம் 2025-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு 2026-ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டது. வெர்சுனி இந்தியா நிறுவனத்தின் சிஎஸ்ஆர் திட்டத்தை அமல்படுத்தும் பார்ட்னராக 'ரைட்ஸ் எஜுகேஷன் அண்ட் டெவலப்மென்ட் சென்டர்' (ஆர்இடிசி) செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனமானது, திட்டமிடல், செயலாக்கம் மற்றும் கண்காணிப்புப் பணிகளுக்கு உறுதுணையாக இருந்தது.

திறப்பு விழாவில் உரையாற்றிய வெர்சுனி இந்தியா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரும் முதன்மை நிர்வாக அதிகாரியுமான (எம்டி & சிஇஓ) குல்பாஹார் தவ்ரானி கூறுகையில், "குழந்தைகள் கற்றுக் கொள்ளவும், வளரவும், கனவு காணவும் ஊக்கமளிக்கும் ஒரு சூழலை உருவாக்குவதிலிருந்தே கல்வி தொடங்குகிறது.

வெர்சுனி நிறுவனத்தின் நோக்கம் வீடுகளைச் சிறந்த இல்லங்களாக மாற்றுவதாகும். மக்கள் வசதியாகவும், ஆதரவாகவும், தங்கள் திறன்களை வளர்த்துக் கொள்ளும் வகையிலான சூழலை உருவாக்குவது, நம்மைச் சுற்றியுள்ள சமூகங்களுக்கும் நீட்டிக்கப்பட வேண்டும் என்பதில் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

தையூர் பள்ளியின் அன்றைய நிலையைப் பற்றி அறிந்தபோது, எங்களால் முடிந்த ஒரு பயனுள்ள பங்களிப்பை வழங்க வாய்ப்பு இருப்பதை உணர்ந்தோம்.

இந்நிதிய கட்டிடம் தையூர் குழந்தைகளுக்கு ஒரு சிறந்த கற்றல் சூழலை உருவாக்குவதற்கான ஒரு சிறிய அடியாகும்.

## சாம்சங் கேலக்ஸி டேப் எஸ்12 சீரிஸ் அக்டோபர் 7 முதல் இந்தியாவில் விற்பனை; ஆரம்ப விலை ரூ.1,29,999




கோயம்புத்தூர் 06, அக்டோபர் 2026: சாம்சங் நிறுவனம் தனது புதிய கேலக்ஸி டேப் எஸ்12 சீரிஸ் டேப்லெட்களின் இந்திய விலை மற்றும் விற்பனை விவரங்களை அறிவித்துள்ளது. கேலக்ஸி டேப் எஸ்12 அல்ட்ரா மற்றும் கேலக்ஸி டேப் எஸ்12+ ஆகியவை அக்டோபர் 7 முதல் சாம்சங் எக்ஸ்க்ளூஸிவ் ஸ்டோர்ஸ், பார்ட்னர் ஸ்டோர்கள், சாம்சங்.காம் மற்றும் முன்னணி ஆன்லைன் தளங்களில் விற்பனைக்கு கிடைக்கும்.

கேலக்ஸி டேப் எஸ்12 அல்ட்ரா மற்றும் டேப் எஸ்12+ ஆகியவை 120ஹெர்ட்ஸ் ரிஃப்ரெஸ் ரேட் மற்றும் 1,600 நிட்ஸ் வரை பீக் பிரைட்நெஸ் கொண்ட டைனமிக் எமோல்ட் 2எக்ஸ் டிஸ்ப்ளேவை கொண்டுள்ளன. மீடியாடெக் டைமென்சிட்டி 9500 பிராசஸர் மூலம் இயங்கும் இந்த டேப்லெட்கள் பிராடெக்டிவிட்டி, எண்டர்டெயின்மென்ட் மற்றும் ஏஐ சார்ந்த பயன்பாடுகளுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. டேப் எஸ்12 அல்ட்ரா 14.6-இன்ச் டிஸ்ப்ளே மற்றும் 5.1எம்எம் தடிமனுடன் வருகிறது. டேப் எஸ்12+ 12.6-இன்ச் டிஸ்ப்ளே மற்றும் 5.3எம்எம் தடிமனைக் கொண்டுள்ளது.

இரு மாடல்களும் ஆன்ட்ராய்டு 17 மற்றும் ஒன் யூஐ 9 மூலம் இயங்குவதுடன், நோட் அஸிஸ்ட் உள்ளிட்ட கேலக்ஸி ஏஐ அம்சங்களை வழங்குகின்றன. இவற்றுடன் எஸ் பென் இன்-பாக்ஸ்-ஆக வழங்கப்படுகிறது. மேலும், ஐபி68 வாட்டர் அண்ட் டஸ்ட் ரெஸிஸ்டென்ஸ் மற்றும் 4-சேனல் ஸ்பாஷியல் ஆடியோ ஆகியவையும் இடம் பெற்றுள்ளன. கேலக்ஸி டேப் எஸ்12 சீரிஸ் ஏழு ஓஎஸ் அப்கிரேட்ஸ் மற்றும் செக்யூரிட்டி அப்டேட்ஸ் வரை ஆதரிக்கிறது.

கேலக்ஸி டேப் எஸ்12 அல்ட்ரா-வின் ஆரம்ப விலை ரூ.1,49,999 ஆகவும், கேலக்ஸி டேப் எஸ்12+ மாடலின் ஆரம்ப விலை ரூ.1,29,999 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இரு மாடல்களும் 12ஜிபி ரேம் உடன் 256ஜிபி மற்றும் 512ஜிபி ஸ்டோரேஜ் ஆப்ஷன்-ல் வை-ஃபை மற்றும் 5ஜி வேரியண்ட்ஸ் ஆக கிடைக்கும்.

விற்பனை சலுகைகளின் கீழ், வாடிக்கையாளர்கள் ரூ.5,000 வரை பேங்க் கேஷ்பேக் மற்றும் ரூ.5,000 வரை அப்கிரேட் போனஸ் பெறலாம். இதனுடன் ஸ்மார்ட்ஃபோன், வியரபிள் மற்றும் புரோகிபோர்ட் கவர் வாங்கும் போது மல்டி-பை பெனிஃபிட்ஸ், மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட வங்கிகள் மற்றும் என்பிஎஃப்சி பார்ட்னர்ஸ் மூலம் 24 மாதங்கள் வரை நோ-காஸ்ட் இஎம்ஐ வசதியும் வழங்கப் படுகிறது.

சாம்சங் நிறுவனம் கேலக்ஸி டேப்-க்காக கேலக்ஸி ஃபார்எவர் புரோகிராம்-ஐ முதன் முறையாக அறிமுகப் படுத்தியுள்ளது. சாம்சங் பைனான்ஸ்+ மூலம் சாம்சங் எக்ஸ்க்ளூஸிவ் ஸ்டோர்ஸ் மற்றும் சாம்சங்.காம்-ல் கிடைக்கும் இந்தத் திட்டத்தின் கீழ், தகுதியுள்ள வாடிக்கையாளர்கள் 24 மாத ஓனர்ஷிப் புரோகிராம் மூலம் கேலக்ஸி டேப் எஸ்12 சீரிஸை வாங்குவதுடன், அஸ்யூர்ட் பைபேக் பெனிஃபிட்ஸ் மற்றும் சாம்சங் கேர்+ பாதுகாப்பு வசதியையும் பெறலாம்.

## ஐசிஐசிஐ லைஃப் இன்சூரன்ஸ் நிறுவனம் புதிய பிராண்ட் அடையாளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது

ICICI Life INSURANCE

சென்னை 06, அக்டோபர் 2026: ஐசிஐசிஐ புருடென்ஷியல் லைஃப் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் என்று முன்பு அறியப்பட்ட ஐசிஐசிஐ லைஃப் இன்சூரன்ஸ் லிமிடெட் இன்று தனது புதிய பிராண்ட் அடையாளத்தையும், 'ஹர் கல் ஆசான்' என்ற வாசகத்தையும் அறிவித்தது.

புதிய பிராண்ட் அடையாளம் மற்றும் வாசகம் குறித்து கருத்து தெரிவித்த ஐசிஐசிஐ லைஃப் இன்சூரன்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தலைமை சந்தைப்படுத்தல், டிஜிட்டல் & பாங்காசூரன்ஸ் அதிகாரி திரு. ஸ்ரீனிவாஸ் பாலசுப்ரமணியன் கூறுகையில், "நம்பிக்கை, வலிமை மற்றும் நிதி அணுகல் தன்மையின் அடையாளமாகத் திகழ்கிற ஐசிஐசிஐ என்ற பெயர் கோடிக்கணக்கான இந்தியர்களின் வாழ்க்கையில் நிலைத்த இடத்தைப் பெற்றுள்ளது. கடந்த 25 ஆண்டுகளில், 20 கோடிக்கும் மேற்பட்ட இந்தியர்களின் கனவுகளையும் எதிர்காலத்தையும் பாதுகாக்க உதவுகின்ற பாக்கியத்தை நாங்கள் பெற்றுள்ளோம்.

இந்தப் பயணம் முழுவதும், இந்தியாவின் நம்ப முடியாத வளர்ச்சியையும், அதனுடன் அதன் மக்களின் அபிலாசைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியையும் நாங்கள் கண்டிருக்கிறோம்.

இன்றைய வேகமான சூழலில், உலகம் மேலும் மேலும் சிக்கலாகவும் கணிக்க முடியாததாகவும் மாறிவிட்டது. மாறிவரும் தொழில் பாதைகள், பரிணமிக்கும் குடும்ப அமைப்புகள், நீண்ட ஆயுட்காலம், மாறிவரும் நிதி முன்னுரிமைகள் ஆகியவை நீண்டகால திட்டமிடலை எப்போதையும் விட சவாலானதாக மாற்றியுள்ளன.

இந்த நிச்சய மற்ற தன்மைகளை எதிர்கொள்வதில் ஆயுள் காப்பீடு ஒரு முக்கிய பங்கு வகித்தாலும், ஒருவரின் நிதி எதிர்காலத்தைப் பாதுகாக்கும் பாரம்பரிய அனுபவம் பெரும்பாலும் சிக்கலானதாகக் கருதப்பட்டது.

எதிர்காலத்திற்கான திட்டமிடல் வாழ்க்கையின் சிக்கல்களை அதிகரிப்பதற்குப் பதிலாக தெளிவையும், நம்பிக்கையையும், மன அமைதியையும் தர வேண்டும் என்பதில் ஐசிஐசிஐ லைஃப் இன்சூரன்ஸ் நிறுவனத்தில் நாங்கள் உறுதியாக நம்புகிறோம். எங்களின் புதிய பிராண்ட் அடையாளம் வெறும் பெயர் மாற்றத்தை விட மிகவும் அதிகமானது. ஒருவரின் நிதி எதிர்காலத்தைப் பாதுகாக்கும் அனுபவத்தை மேலும் எளிமையாகவும், மேலும் வெளிப்படையாகவும், மேலும் நெகிழ்வாகவும், சுலபமாகவும் மாற்றுவதற்கான எங்களின் பரந்த உறுதிப்பாட்டை இது பிரதிபலிக்கிறது. எங்களின் வலுவான 25 ஆண்டு அடித்தளத் தின் மீது கட்டமைத்து, வாடிக்கையாளர் தொடர்பை தொடர்ந்து ஆழப்படுத்துவோம், துறையில் சிறப்பின் புதிய தரநிலைகளை நிறுவுவோம், மேலும் '2047-க்குள் அனைவருக்கும் காப்பீடு' என்ற தேசிய இலக்கை நோக்கி தீவிரமாக பங்களிப்போம். என்று கூறினார்.

இந்த புதிய பிராண்ட் வாக்குறுதியின் மூலம், ஆயுள் காப்பீடு குறித்த உரையாடலை வெறுமனே தவறாகப் போகக்கூடிய வற்றிலிருந்து பாதுகாப்பதற்கு அப்பால், எதிர்காலம் எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்து, மக்கள் எளிதாகவும் வசதியாகவும் கூடுதல் தகவல்களுடனும் நம்பிக்கையுடனும் முடிவுகளை எடுக்க உதவுவதை நோக்கி கொண்டு செல்ல இந்த நிறுவனம் இலக்கு வைத்துள்ளது.

## ஜெம் கிரணைட் தொழிலதிபர் வீரமணி சிறுமிகளுக்கு பாலியல் துன்புறுத்தல் கொடுத்த வழக்கில் குற்றத்திற்கு உடந்தையாக இருந்த 3 ஓட்டுநர்கள் கைது

சென்னை 06, அக்டோபர் 2026: சென்னை பெருநகர காவல் விபச்சார தடுப்பு பிரிவில் பெறப்பட்ட பென்ட்ரைவ்-ல் ஜெம் கிரணைட் தொழிலதிபர் வீரமணி என்பவர் சாந்தி மற்றும் மகேந்திர சிம்ஹன் ஆகியோரது வீட்டின் படுக்கையறையில் சிறுமி ஒருவருடன் பாலியல் குற்றத்தில் ஈடுபட்டுள்ளதாக பென்ட்ரைவ்-வில் பதிவாகியிருந்த வீடியோவில் வீரமணி பாலியல் குற்றத்தில் ஈடுபட்டது தெரியவந்ததின் அடிப்படையில், சென்னை பெருநகர மத்திய குற்றப்பிரிவு, விபச்சார தடுப்பு பிரிவில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இது தொடர்பாக ஜெம் கிரணைட் தொழிலபதிர் வீரமணி மற்றும் அவருக்கு உடந்தையாக இருந்த சாந்தி மற்றும் மகேந்திர சிம்ஹன் ஆகியோர் கைது செய்யப்பட்டும் இவ்வழக்கில் வீரமணி சிறுமியிடம் ஆபாசமாக இருப்பது போன்ற மேலும் ஒரு வீடியோவை வைத்திருந்து தொடர்பாக அதைப் பற்றி காவல்துறைக்கு தகவல் தெரிவிக்காத குற்றத்திற்காக கணேசன் என்பவரும் கைது செய்யப்பட்டு, மேற்படி நால்வரும் சிறையில் அடைக்கப் பட்டனர்.

காவல்துறை இயக்குநர் / படைத் தலைவர் (டிஜிபி/ஹெச்ஓபிஎஃப்), தமிழ்நாடு அவர்களின் உத்தரவின் பேரில் மேற்படி போக்சோ வழக்குகளில் விசாரணை மேற்கொள்ள சிறப்பு புலனாய்வுக் குழு (ஸ்பெஷல் இன்வெஸ்டிகேஷன் டீம்) அமைக்கப்பட்டு தீவிர புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஏற்கனவே ஜெம் வீரமணி மீது நான்கு வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில் மேலும் ஒரு வழக்கு 02.10.2026 பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணையில் உள்ளது.

மேற்படி ஐந்து வழக்குகளில் புலன் விசாரனை மேற்கொண்டதில், ஜெம் கிரணைட் தொழிலபதிர் வீரமணியின் பாலியல் துன்புறுத்தல்களுக்கு சிறுமிகளை அழைத்து வந்து உடந்தையாக இருந்த குற்றத்திற்காக, ஜெம் கிரணைட் வீரமணியின் ஓட்டுநர்கள் 1.லாசர், 2.பார்த்திபன் மற்றும் 3.பாபு ஆகியோர்கள் அடையாளம் காணப்பட்டு நேற்று (05.10.2026) கைது செய்யப்பட்டனர்.

மேற்கண்ட ஐந்து வழக்குகளில் சம்மந்தப்பட்ட ஜெம் கிரணைட் தொழிலபதிர் வீரமணியின் பாலியல் துன்புறுத்தல் குற்றத்திற்கு உடந்தையாக இருந்த ஓட்டுநர்கள் ஜெம் கிரானைட் அதிபர் வீரமணியிடம் லாசர் என்பவர் 23 வருடங்களாகவும், பாபு என்பவர் 8 வருடங்களாகவும் மற்றும் பார்த்திபன் என்பவரும் பணிபுரிந்து வந்துள்ளனர். ஜெம் வீரமணியின் குற்ற செயல்களுக்கு துணை போனது பற்றியும், அது தொடர்பாக அவர்களுடைய வீடுகளில் சோதனைகள் நடத்தப்பட்டு, 8 செல்போன்கள் மற்றும் 55 ஆவணங்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டன. இவ்வழக்கில் தொடர்ந்து தீவிர விசாரணை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## யமஹா மோட்டோஜிபி வீரர்கள் இந்தியாவில் வாடிக்கையாளர்கள் மற்றும் ரசிகர்களுடன் பந்தயத்தின் உணர்வைக் கொண்டாடுகின்றனர்

சென்னை 06, அக்டோபர் 2026: இந்தியாவின் யமஹா மோட்டார் (ஐஒய்எம்) பிரைவேட் லிமிடெட் நிறுவனம், இந்தியாவின் பந்தய மரபு, பொறியியல் சிறப்பு மற்றும் இந்திய வாடிக்கையாளர்கள் மற்றும் ரசிகர்களுடனான தனது ஆழமான தொடர்பைக் கொண்டாடும் விதமாக மோட்டோஜிபி ரைடர்களை சிறப்பு வருகையாக வரவேற்றது. இந்தியாவின் இந்த வருகையின் ஒரு பகுதியாக, யமஹா மோட்டார் ரேசிங் அணியின் மோட்டோஜிபி ரைடர்களான பாபியோ குவார்டாராரோ மற்றும் அலெக்ஸ் ரின்ஸ், ப்ரிமா பிரமாக் யமஹா மோட்டோஜிபி ரைடர் ஜாக் மில்லர் மற்றும் அணித் தலைவர் (டீம் பிரின்சிபால்) பாலோ பாவேசியோ ஆகியோர் தொடர்ச்சியான கலந்துரையாடல்களில் பங்கேற்றனர். இது உலகத் தரம் வாய்ந்த பந்தயங்களின் சிலிர்ப்பை நாட்டின் யமஹா ஆர்வலர்களுக்கு அருகில் கொண்டு சேர்த்தது.

மோட்டோஜிபி ரைடர்கள் மெட்ராஸ் இன்டர்நேஷனல் சர்க்யூட்டிற்கு வருகை தந்தார், அங்கு அவர்கள் உற்சாகமான மற்றும் ஈர்க்கக்கூடிய சூழலில் 100-க்கும் மேற்பட்ட யமஹா ரசிகர்கள் மற்றும் புதிய ஒய்இசட்எஃப்-ஆர்2 வாடிக்கையாளர்களைச் சந்தித்தனர். இந்த சந்திப்பு மற்றும் வரவேற்பு நிகழ்வானது, பந்தய நுட்பங்கள் மற்றும் ரைடர் தயாரிப்பு முதல் மோட்டார் சைக்கிள் தொழில்நுட்பம் மற்றும் மோட்டோஜிபி வாழ்க்கை வரை அனைத்தையும் விவாதிப்பதற்கான அரிய வாய்ப்பை ஆர்வலர்களுக்கு வழங்கியது. ரைடர்கள் ரசிகர்களுடன் கணிசமான நேரத்தைச் செலவிட்டனர், ஆட்டோகிராஃப்களை வழங்கினர், அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர் மற்றும் உலகெங்கிலும் உள்ள யமஹா ரைடர்களை ஒன்றிணைக்கும் மோட்டார் சைக்கிள் ஓட்டுதலுக்கான ஆர்வத்தைக் கொண்டாடினர்.



மோட்டோஜிபி நட்சத்திரங்கள் புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட ஒய்இசட்எஃப்-ஆர்2 ஐ சர்க்யூட்டில் ஓட்டிப் பார்த்தனர், யமஹா இன் சமீபத்திய ஆர்-சீரீஸ் இயந்திரத்தை அதன் சோதனைகள் மூலம் இயக்கி அதன் செயல்திறன் சார்ந்த தன்மையை நேரடியாக அனுபவித்தனர். அதன் சுறுசுறுப்பு, ரைடர்-மையப்படுத்தப்பட்ட இயக்கவியல் மற்றும் சூப்பர் ஸ்போர்ட் டிஎன்ஏ ஆகியவற்றால் ஈர்க்கப்பட்ட ரைடர்கள், ஈடுபாட்டுடன் கூடிய மோட்டார் சைக்கிள் ஓட்டும் அனுபவத்தை வழங்கும் மோட்டார் சைக்கிளின் திறனைப் பாராட்டினர். இது யமஹா இன் பந்தய நிபுணத்துவத்திற்கும் இந்திய வாடிக்கையாளர்களுக்கான அதன் சமீபத்திய சலுகைக்கும் இடையிலான தொடர்பை மேலும் வலுப்படுத்தியது.

மேலும் மோட்டோஜிபி நட்சத்திரங்கள் சென்னையில் உள்ள யமஹாவின் அதிநவீன உற்பத்தி வசதி மற்றும் ஆர்&டி மையத்திற்கும் (ஆர்&டி சென்டர்) வருகை தந்தனர். அங்கு ரைடர்களுக்கு ஆலை பற்றிய பிரத்யேக சுற்றுப்பயணம் வழங்கப்பட்டது மற்றும் சமீபத்தில் வெளியிடப்பட்ட ஒய்இசட்எஃப்-ஆர்2 இன் உற்பத்தி முறையை அவர்கள் நேரில் பார்வையிட்டனர். யமஹா மோட்டார் சைக்கிள்களை உருவாக்குவதில் உள்ள துல்லியம், கைவினைத் திறன் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்களை அவர்கள் நேரடியாக அனுபவித்தனர், அதே நேரத்தில் நிறுவனத்தின் கடுமையான தரம் மற்றும் உற்பத்தித் தரங்கள் பற்றிய நுண்ணறிவுகளைப் பெற்றனர். இந்த வருகையின் போது, ரைடர்கள் ஆலை ஊழியர்களுடன் கலந்துரையாடினர் மற்றும் யமஹாவின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் குழுவினருடன் (ரிசர்ச் & டெவலப்மெண்ட் டீம்) பந்தயப் பாதையிலும் வெளியேயும் யமஹாவின் தயாரிப்புகளுக்கு ஊக்கமளிக்கும் செயல்திறன் பொறியியல், புதுமை மற்றும் சிறந்து விளங்குவதற்கான தொடர்ச்சியான நாட்டம் குறித்து கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

## டயாஜியோ இந்தியா முற்றிலும் புதிய மெக்டோவெல்ஸ் நம்பர் 1ஐ அறிமுகப்படுத்தியது, இந்தியாவின் மிகப்பெரிய விஸ்கி பிராண்டுகளில் ஒன்றை புதிய தலைமுறைக்காக மறுகற்பனை செய்துள்ளது

புதுச்சேரி 06, அக்டோபர் 2026: டயாஜியோ இந்தியா, இந்திய ஆல்கோபெவ் துறையில் மிக முக்கியமான மாற்றங்களில் ஒன்றை வெளிப்படுத்தியுள்ளது, இந்தியாவின் மிக அடையாளமான பிராண்டுகளில் ஒன்று புதிய தலைமுறைக்காக எவ்வாறு வளர்கிறது மற்றும் விஸ்கி பிரிவுக்கு ஒரு புதிய அளவுகோலை எவ்வாறு நிறுவுகிறது என்பதைக் காட்டுகிறது.

வழக்கமான பேக்கேஜிங் புதுப்பிப்பை விட மிக அதிகமாக, இந்த மறுகண்டுபிடிப்பு மேம்படுத்தப்பட்ட பிளெண்டுடன் கூடுதல் ஸ்காட்ச்சை இணைக்கிறது, அதன் பாரம்பரிய ஸ்காட்ச் குறியீடுகளை தக்கவைத்துக்கொண்டு அவற்றை புதிய தலைமுறைக்காக நவீனப்படுத்துகிறது, அதனுடன் புதிய பிரீமியம் அடையாளத்தையும் தருகிறது. இதன் விளைவு வளர்ச்சியடைந்த மெக்டோவெல்ஸ் நம்பர் 1, இது ஒரு நூற்றாண்டுக்கும் மேலான நம்பிக்கை மற்றும் பரிச்சயத்தின் மீது கட்டப்பட்டு, இன்றைய விஸ்கி நுகர்வோருக்கு ஒரு புதிய அளவுகோலை நிறுவுகிறது.

ஆண்டுதோறும் 30 மில்லியனுக்கும் மேற்பட்ட கேஸ்கள் விற்பனையாகும் நிலையில், மெக்டோவெல்ஸ் நம்பர் 1இன் இந்த மாற்றம் இந்திய விஸ்கி பிரிவுக்கு ஒரு முக்கிய தருணத்தைக் குறிக்கிறது. நுகர்வோர் விருப்பங்கள் விலையால் அளவிடப்படும் மதிப்பிலிருந்து தரம், கைவினைத்திறன் மற்றும் அனுபவத்தால் வரையறுக்கப்படும் மதிப்பை நோக்கி மாறும்போது, நுகர்வோர் வெறும் மென்மை மற்றும் பரிஷ்காரம் மட்டுமல்ல, சமூக கரன்சியையும் தரும் விஸ்கிகளை அதிகமாக விரும்புகிறார்கள்: கொண்டாட்டங்கள் மற்றும் இணைப்பின் தருணங்களில் எளிதாகப் பொருந்தி, சுவை மற்றும் அந்தஸ்தில் ஒரு படி மேலே என்பதைக் காட்டும் ஒரு பானம். மெக்டோவெல்ஸ் நம்பர் 1 இந்த வளர்ச்சிக்கு பதிலளிக்கிறது, மாஸ் பிரீமியம் பிரிவை மறுவரையறை செய்ய உதவுகிறது, பிராண்ட் எப்போதும் நின்ற அணுகல் மற்றும் உள்ளடக்கத்தில் சமரசம் செய்யாமல் உயர்ந்த தரத்தையும் கைவினைத்திறனையும் வழங்குகிறது.




இந்த மாற்றத்தின் மையத்தில் மேம்படுத்தப்பட்ட பிளெண்ட் உள்ளது: தேர்ந்தெடுக்கப்பட்ட இறக்குமதி ஸ்காட்ச், இந்திய மால்ட்கள் மற்றும் பிரீமியம் கிரேன் ஸ்பிரிட்ஸ் கலவை, தேர்ந்தெடுக்கப்பட்ட ஓக் மற்றும் அமெரிக்கன் பேரல்களில் பழுக்க வைக்கப்பட்டு, கூடுதல் மென்மைக்காக இந்தியா மற்றும் ஸ்காட்லாந்து முழுவதும் பிளெண்ட் செய்யப்பட்டுள்ளது. 100க்கும் மேற்பட்ட தரச் சோதனைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட, இந்த திரவம் வெனிலா, மென்மையான கிரேன் இனிப்பு மற்றும் மென்மையான மால்ட் சுவடுகளுடன் இலகுவான மற்றும் கவரும் நறுமணத்தைக் கொண்டுள்ளது, பழுத்த மரம் மற்றும் நுட்பமான இனிப்பு மசாலாவின் நுட்பமான சுவடுகளால் பூர்த்தி செய்யப்படுகிறது. சுவை உணர்வில், மென்மையான இனிப்பு மென்மையான மால்டி, மர மற்றும் வெனிலா சுவடுகளுடன் அடுக்குகிறது, இது தெளிவான, மென்மையான முடிவுக்கு இட்டுச் செல்கிறது, அதில் வெனிலா கிரீம் மற்றும் நுட்பமான இனிப்பின் நீடிக்கும் சுவடுகள் உள்ளன. டயாஜியோவின் உலகளாவிய பிளெண்டிங் நிபுணத்துவத்தின் மீது கட்டப்பட்ட, புதிய திரவம் மெக்டோவெல்ஸ் நம்பர் 1ஐ உலகின் மிகவும் விரும்பப்பட்ட விஸ்கி பிராண்டுகளில் ஒன்றாக மாற்றிய தனித்துவமான குணத்தை தக்கவைத்துக் கொள்கிறது.

## ஆந்திராவில் நடந்த அரசு நிகழ்ச்சியில் நிர்மலா சீதாராமனுக்கு எதிராக இளைஞர்கள் முழக்கம்?: காங்கிரஸ் வெளியிட்ட வீடியோவிற்கு கண்டனம்

சென்னை 06, அக்டோபர் 2026: ஆந்திராவில் ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு எதிராக இளைஞர்கள் கோஷமிட்டதாக காங்கிரஸ் பரப்பிய வீடியோ முற்றிலும் போலியானது என முதல்வர் சந்திரபாபு நாயுடு, அமைச்சர் நாரா லோகேஷ் ஆகியோர் மறுப்பு தெரிவித்துள்ளனர். ஆந்திர மாநிலம் ராயலசீமாவில் நடைபெற்ற அரசு விழாவில் பாஜக மூத்த தலைவரான ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, துணை முதல்வர் பவன் கல்யாண் மற்றும் அமைச்சர் நாரா லோகேஷ் ஆகியோர் ஒன்றாகப் பங்கேற்றனர்.

இந்த விழாவில் நிர்மலா சீதாராமன் பேசத் தொடங்கிய போது, வேலைவாய்ப்பு கேட்டு இளைஞர்கள் அவருக்கு எதிராக முழக்கமிட்டு எதிர்ப்புக் காட்டியதாகவும், அவர்களை முதல்வர் சந்திரபாபு நாயுடு எழுந்து நின்று சமாதானப்படுத்தியதாகவும் கூறி சமூக வலைதளங்களில் வீடியோ ஒன்று வேகமாகப் பரவியது. இந்த வீடியோ காட்சியை தனது எக்ஸ் தளப் பக்கத்தில் பகிர்ந்த காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ஜெய்ராம் ரமேஷ், 'மக்களிடையே எவ்வளவு பெரிய அதிருப்தி நிலவுகிறது என்பதை நிதியமைச்சரே நேரடியாக உணர்ந்துள்ளார்' என்று பதிவிட்டது தேசிய அரசியலில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது. இந்த விவகாரத்தில் காங்கிரஸ் பரப்பிய தகவலுக்கு தெலுங்கு தேசம் கட்சி உடனடியாக முற்றுப்புள்ளி வைத்துள்ளது.

இதுகுறித்து ஆவேசமாகப் பதிலளித்த அமைச்சர் நாரா லோகேஷ், 'பொது மக்களின் இயல்பான உற்சாக வரவேற்பை வெட்டித் திரித்து காங்கிரஸ் தவறான கதையை உருவாக்கியுள்ளது; பொறுப்புள்ள



மூத்த தலைவரான ஜெய்ராம் ரமேஷ் உண்மையை உணர்ந்து இந்த பொய்யான பதிவை உடனே நீக்க வேண்டும்' என்று காட்டமாகத் தெரிவித்தார். தொடர்ந்து விளக்கம் அளித்த முதல்வர் சந்திரபாபு நாயுடு, 'கூட்டத்தினரின் அதீத உற்சாகத்தால் ஒன்றிய அமைச்சரின் பேச்சு தடைபடாமல் இருக்கவே நான் தலையிட்டேன். மக்களின் அன்பை அதிருப்தி என சித்தரிப்பது அப்பட்டமான பொய்' என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

## விஜய் ரோடுஷோவுக்கு பல மடங்கு செலவு; தவெக வேட்பாளர்கள் மீது தேர்தல் ஆணையத்தில் புகார்

சென்னை 06, அக்டோபர் 2026: தேர்தல் விதிகளை மீறி தவெக வேட்பாளர்கள் பல கோடி ரூபாய் செலவு செய்திருப்பதாக தேர்தல் ஆணையத்தில் பரபரப்பு புகார் செய்யப்பட்டுள்ளது. மதுரை மாவட்டம், மேலூரைச் சேர்ந்த வக்கீல் அமலன், தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பியுள்ள மனு: தமிழ்நாட்டில் தாராபுரம், மதுராந்தகம் தொகுதிகளுக்கு நாளை இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. இந்த தொகுதிகளில் போட்டியிடும் தமிழக வெற்றி கழக வேட்பாளர்கள் சத்தியபாமா மற்றும் மரகதம் குமரவேல் தேர்தல் விதிகளை மீறி பல கோடி ரூபாய் செலவு செய்துள்ளனர். இதனை தேர்தல் செலவு கணக்கில் சேர்த்து அவர்கள் மீது தகுதி நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி தவெக வேட்பாளர் சத்தியபாமாவிற்கு ஆதரவாக அக்கட்சியின் தலைவரான முதலமைச்சர் ஜோசப் விஜய் 2 நாள் 'ரோடு ஷோ' மேற்கொண்டார். இதற்கு பெருமளவு செலவு செய்யப்பட்டுள்ளது. தேர்தல் ஆணைய விதிப்படி ஒரு சட்டமன்ற வேட்பாளர் அதிகபட்சமாக ரூ.40 லட்சம் செலவிடலாம். ஆனால், தாராபுரத்தில் நடந்த முதல்வரின் இரண்டு நாள் ரோடு ஷோவுக்கு மொத்தச் செலவு ரூ.2.27 கோடிக்கும் அதிகமாக இருக்கும் என கூறப்படுகிறது. இதே போல், மதுராந்தகம் (தனி) சட்டமன்றத் தொகுதி தவெக வேட்பாளர் மரகதம் குமரவேலுவுக்காக முதல்வர் விஜய் அக்.2ல் மாமண்டூர் முதல் மாம்பாக்கம் வரை சுமார் 45 கி.மீ. தூரம் பிரம்மாண்ட ரோடு ஷோ நடத்தினார். இதற்காக ரூ.1.05 கோடி செலவாகியுள்ளது. மேலும் அலங்காரங்கள், கொடிக்கம்பங்கள், வாகனங்கள், இசைக் குழுக்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் உட்பட ஒரு நாள் ரோடு ஷோவின் மொத்தச் செலவு பல கோடி இருக்கும்.இது மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951, பிரிவு 123 (6)-இன் கீழ் ஊழல் நடவடிக்கை ஆகும்.

எனவே, தேர்தல் ஆணையம் வீடியோ கண்காணிப்புக் குழு பதிவு செய்த காணொலிகளை பார்வையிட்டு ஆய்வு செய்ய வேண்டும். காவல்துறை நெடுஞ்சாலைத்துறை மற்றும் உள்ளாட்சிப் பதிவேடுகளை ஆய்வு செய்து, மாவட்டத் தேர்தல் அலுவலரின் விலைப்பட்டியலின்படி செலவுகளை மதிப்பீடு செய்து வேட்பாளரின் செலவு பதிவேட்டில் சேர்க்க வேண்டும். இரண்டு வேட்பாளருக்கு நோட்டீஸ் அனுப்பி, அத்துமீறிய செலவினங்களை அவர்களது அதிகாரப்பூர்வத் தேர்தல் செலவுக் கணக்கில் சேர்க்க வேண்டும். முறையான செலவு கணக்கைத் தாக்கல் செய்யத் தவறும் வேட்பாளரை 3 ஆண்டுகளுக்கு தகுதி நீக்கம் செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

செவ்வாய்,
அக்டோபர் 06, 2026

# தனது தாத்தா அல்லு ராமலிங்கய்யாவின் பிறந்தநாளில் புதிய அலுவலகம் திறந்த அல்லு அர்ஜுன்!

சென்னை 06, அக்டோபர் 2026: மறைந்த பழம்பெரும் நடிகரும் பத்மஸ்ரீ விருது பெற்றவருமான அல்லு ராமலிங்கய்யா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, ஐகான் ஸ்டார் அல்லு அர்ஜுன் 'ICONZA' என்ற தனது புதிய அலுவலகத்தை திறந்தார்.



எளிமையாக நடைபெற்ற தொடக்க விழா பூஜையில் அல்லு அர்ஜுன் குடும்பத்தினர் கலந்து கொண்டனர். இந்த சிறப்பான நாளின் புகைப்படங்களைப் பகிர்ந்த அல்லு அர்ஜுன், தனது தாத்தாவின் நிலைத்திருக்கும் கலைப் பாரம்பரியத்திற்கு அர்ப்பணிப்பாக இந்த புதிய அலுவலகம் செயல்படும் என்றார்.

இந்திய சினிமாவின் முன்னோடியாகப் போற்றப்படும் அல்லு ராமலிங்கய்யா அவர்களின் புகழ்பெற்ற திரைப்பயணம் ஐம்பது வருடங்களுக்கும் மேலாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட திரைப்படங்களையும் உள்ளடக்கியது. தனது தாத்தாவின் பிறந்தநாளில் இந்த புதிய பயணத்தைத் தொடங்கும் அல்லு அர்ஜுன், சினிமா, படைப்பாற்றல் மற்றும் கலைநோக்கில் தனது குடும்ப பாரம்பரியத்தைத் தொடர்ந்து முன்னெடுக்கிறார்.

கிரியேட்டிவிட்டி, இணைந்து செயல்படுதல் மற்றும் புதிய யோசனைகளுக்கான இடமாக உருவாக்கப்பட்டுள்ள ICONZA, நடிப்பைத் தாண்டி அல்லு அர்ஜுனின் விரிவடைந்து வரும் கலைப் பயணத்தில் மற்றொரு முக்கியமான மைல்கல்லாக அமைந்துள்ளது.

தற்போது, அட்லி இயக்கும் 'ராக்கா' திரைப்படத்திற்காக அல்லு அர்ஜுன் தயாராகி வருகிறார். இந்த திரைப்படம் சமீபத்தில் கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்திலும் இடம்பிடித்தது. இதனைத் தொடர்ந்து, லோகேஷ் கனகராஜ் இயக்கும் 'ஏஏ23' திரைப்படத்திலும், அதன் பின்னர் 'புஷ்பா 3: தி ரேம்பேஜ்' திரைப்பத்திலும் நடிக்கிறார்.

# “‘சிக்மா’ திரைப்படம் மூலம் தமிழ் திரையுலகில் அறிமுகமானது எனக்கு பெருமை” - நடிகை ஃபரியா அப்துல்லா!

சென்னை 06, அக்டோபர் 2026: லைகா புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில், ஜேசன் சஞ்சய் இயக்கத்தில், சந்தீப் கிஷன் நடிப்பில்' வெளியான 'சிக்மா' திரைப்படம் பாக்ஸ் ஆபிஸில் நல்ல வசூல் பெற்று வருகிறது. ரசிகர்களிடையே கிடைத்து வரும் நேர்மறையான வாய் வழிப் பாராட்டுகளால், படத்தைப் பார்க்க வரும் பார்வையாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.



ஆக்ஷன் அட்வென்ச்சர் ஹெய்ஸ்ட் எண்டர்டெயின்மெண்ட் படமாக உருவாகியுள்ள 'சிக்மா' மூலம் நடிகை ஃபரியா அப்துல்லா தமிழ் திரையுலகில் அறிமுகமாகியுள்ளார். படத்தின் வெற்றி அவரது அறிமுகத்தை இன்னும் ஸ்பெஷலாக்கியுள்ள. இந்த திரைப் படத்தில் சந்தீப் கிஷன், ஃபரியா அப்துல்லா மற்றும் அறிமுக இயக்குநர் ஜேசன் சஞ்சய் என இளம் திறமையாளர்கள் ஒன்றிணைந்துள்ளனர்.

ஃபரியாவைப் பொறுத்தவரை, ‘சிக்மா' திரைப்படம் தமிழ்த் திரையுலகில் அவருடைய அறிமுகம் மட்டுமல்லாமல், நடிப்பு, நடனம், நாடகம், ராப் இசை மற்றும் ஃபிலிம் மேக்கிங் என பல்வேறு துறைகளில் அவர் மேற்கொண்டு வரும் பயணத்தில் மற்றொரு முக்கியமான மைல்கல்லாகவும் அமைந்துள்ளது.

படத்திற்கு கிடைத்து வரும் திரையரங்க வரவேற்பு மற்றும் ஜேசன் சஞ்சயுடன் பணியாற்றிய அனுபவம் குறித்து ஃபரியா பகிர்ந்து கொண்டதாவது, "சஞ்சயுடன் பணியாற்றியது அற்புதமான அனுபவம். அவர் உருவாக்க விரும்புவதைப் பற்றி மிகவும் தெளிவாகவும், நம்பிக்கையுடனும் படமாக்கினார். நிதானமான அவரது அணுகுமுறையால் நாங்களும் உற்சாகமாக பணியாற்றினோம்.

‘சிக்மா’ படத்தின் மூலம் தமிழில் அறிமுகமாகியிருப்பது எனக்கு பெருமை. தற்போது படத்தை திரையரங்குகளில் பார்த்து, ரசிகர்களிடமிருந்து நேர்மறையான வரவேற்பைப் பெறுவது, இந்தப் பயணத்தை மேலும் மறக்க முடியாததாக மாற்றியுள்ளது" என்றார்.

ஹைதராபாத்தில் பிறந்து வளர்ந்த ஃபரியா அப்துல்லா, நடிப்பைத் தாண்டியும் பல்வேறு கிரியேட்டிவ் விஷயங்களையும் தொடர்ந்து செய்து வருகிறார். சிறு வயதிலிருந்தே நடனத்தில் ஆர்வம் கொண்ட அவர், ஸ்டுடியோ மற்றும் ஸ்ட்ரீட் நடன வடிவங்கள் உள்ளிட்ட பல்வேறு நடன முறைகளில் பயிற்சி பெற்றுள்ளார். உயர்நிலைப் பள்ளிப் படிப்பின் போதும் நுண்கலை மற்றும் இலக்கியத்தின் மீது ஆர்வம் கொண்டுள்ளார். அதன் பின்னர் மாஸ் கம்யூனிகேஷன் படித்த அவர், ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக நாடகம் மற்றும் மேடை நிகழ்ச்சிகளில் பயிற்சி பெற்றார். இதன் மூலம் நடிப்பு மற்றும் கதை சொல்லலில் வலுவான அடித்தளத்தை உருவாக்கிக் கொண்டார்.

நடிப்புடன் இணைந்து இரண்டு ஆண்டுகளாக அவர் ராப் இசையை எழுதி, பாடி வருவதுடன், இசை வீடியோக்களை இயக்கும் பணியிலும் ஈடுபட்டு வருகிறார். சமீபத்தில் ஒரு இசை வீடியோவை தயாரித்த தன் மூலம் கேமராவுக்குப் பின்னால் தனது பயணத்தில் மற்றொரு முக்கியமான அடியை எடுத்து வைத்துள்ளார்.

'சிக்மா' படத்தின் வெற்றியை அடுத்து விஜய் ஆண்டனி நடிப்பில் சுசீந்திரன் இயக்கத்தில் வெளியாகவிருக்கும் ‘வள்ளிமயில்' திரைப்படத்திலும் ஃபரியா நடித்துள்ளார்.

‘சிக்மா’ திரைப்படத்தை லைகா புரொடக்ஷன்ஸ், சுபாஸ்கரன் தயாரித்துள்ளார். இப்படத்தில் சந்தீப் கிஷன், ஃபரியா அப்துல்லா, ராஜு சுந்தரம், சம்பத் ராஜ், ஷிவ் பண்டிட், அன்பு தாசன், யோக் ஜேபி, மகாலட்சுமி, ஷீலா ராஜ்குமார், கமலேஷ் மற்றும் கிரண் கொண்டா ஆகியோர் நடித்துள்ளனர். ஜேசன் சஞ்சய் இப்படத்தை இயக்கியுள்ளார். தமன் எஸ். இசையமைத்துள்ளார். கிருஷ்ணன் வசந்த் ஒளிப்பதிவையும், பிரவீன் கே.எல். படத்தொகுப்பையும் மேற்கொண்டுள்ளனர். சஞ்சீவ் கிரியேட்டிவ் புரொடக்ஷனை கவனித்துள்ளார்.

# ‘டோரதி’ திரைப்படத்தின் பிரம்மாண்ட வெற்றி!

சென்னை 06, அக்டோபர் 2026: இயக்குநர் கார்த்திக் சுப்புராஜின் பத்தாவது திரைப்படமான ‘டோரதி’ அதன் கதைக் களம், நடிகர்களின் சிறப்பான நடிப்பு மற்றும் இளையராஜாவின் இசையால் ரசிகர்களின் மனதை வென்று பிரம்மாண்ட வெற்றிப் படமாக உருவாகியுள்ளது. அடையாளம், நட்பு, ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் மனித உறவுகள் ஆகியவற்றை புதிய பார்வையுடனும் மனிதநேயத்துடன் அணுகும் வகையில் புதிய கோணத்தை ‘டோரதி’ திரைப்படம் கொடுத்துள்ளது.

படம் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக வழக்கமான கமர்ஷியல் விஷயங்களை வலிந்து திணிக்காமல் வலுவான கதையை எடுத்து சொல்லியிருப்பதே இந்தப் படத்தின் வெற்றிக்கு முக்கிய காரணம். படம் பெற்று வரும் வரவேற்பால் திரையரங்குகளில் ரசிகர்களின் வருகை அதிகரித்திருப்பதையும், நேர்மறையான வாய்மொழிப் பாராட்டுகள் பெருகி வருவதையும் காண முடிகிறது.

முன்னணி திரையரங்க உரிமையாளரான திருப்பூர் சுப்ரமணியம், படத்தின் வெற்றி குறித்து மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொண்டதாவது, “நல்ல திரைப்படங்கள் மிகப்பெரும் வெற்றி பெறுவதைப் பார்ப்பது ஒரு திரையரங்க உரிமையாளராக எனக்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. கார்த்திக் சுப்புராஜ் தனது பத்தாவது திரைப்படத்தின் மூலம் மிகப்பெரிய சாதனையை நிகழ்த்தியுள்ளார். கோவை ரசிகர்கள் ‘டோரதி’ திரைப்படத்தை கொண்டாடி வருகின்றனர்” என்றார்.



உணர்வுப்பூர்வமான மற்றும் வழக்கத்திற்கு மாறான ஒரு கதையை நேர்மையுடன் சொல்ல வேண்டும் என்ற கார்த்திக் சுப்புராஜின் நம்பிக்கைக்கும் இந்த வெற்றி சான்றாக அமைந்துள்ளது. ‘டோரதி’ மூலம் தனது திறமையை மீண்டும் நிரூபித்துள்ளார். ரிஷிகாந்த் மற்றும் சனந்த் ஆகியோரின் கெமிஸ்ட்ரியும், மிகையில்லாத இயல்பான நடிப்பும் ரசிகர்களிடையே பாராட்டுகளைப் பெற்றுள்ளது. இசைஞானி இளையராஜாவின் ஆத்மார்த்தமான இசை படத்திற்கு உயிரூட்டியுள்ளது.

படத்தின் தொழில்நுட்பக்குழுவினரும் படத்திற்கு பெரும் பலம்.

‘டோரதி’ திரைப்படத்தை பார்த்த பார்வையாளர்கள் தாங்கள் படத்தைப் பார்த்து ரசிப்பதுடன் நிறுத்திக்கொள்ளாமல், மற்றவர்களுக்கும் பரிந்துரைக்கின்றனர். தொடர்ந்து அதிகரித்து வரும் நேர்மறையான வாய்மொழிப் பாராட்டுகள், திரையரங்குகளில் ரசிகர்களின் வருகையாக மாறியுள்ளது. குடும்பங்கள் மற்றும் பல்வேறு தரப்பு பார்வையாளர்கள் திரையரங்குகளை நோக்கி வரத் தொடங்கியுள்ளனர். படம் பல கேள்விகளையும் விவாதங்களையும் உரையாடல்களையும் தொடங்கி வைத்துள்ளது.

திரைப்படத்தின் பாக்ஸ் ஆபிஸ் வசூலே இன்றைய சூழலில் பெரும்பாலும் கவனிக்கப்படுகிறது. அதைத் தாண்டி, வலிமையான கதை, இயல்பான நடிப்பு மற்றும் உணர்வுகளுடன் ஒன்றிணையும் கதை போன்றவையும் படத்தின் வெற்றியை நிர்ணயிக்கும் என்பதை ‘டோரதி’ மீண்டும் நிரூபித்துள்ளது.

தொடர்ந்து பார்வையாளர்களின் அன்பையும் ஆதரவையும் பெற்று வரும் ‘டோரதி’, தற்போது ஒரு பிரமாண்ட வெற்றிப் படமாக மட்டுமல்லாமல், அர்த்தமுள்ள ஒரு சமூக உரையாடலுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்திய திரைப்படமாகவும் மாறியுள்ளது.

# மயிலாப்பூர் பகுதியில் தகராறை தடுக்க சென்ற காவலாளியை தாக்கிய கார் ஓட்டுநர் கைது. கார் பறிமுதல்

சென்னை 06, அக்டோபர் 2026: சென்னை, மயிலாப்பூர், குயில்தோட்டம் பகுதியில் வசித்து வரும் அமல்ராஜ், வ/49, த/பெ. அருள்ராஜ் என்பவர் அதே பகுதியில் காவாலாளியாக வேலை செய்து வருவதாகவும், இவர் கடந்த 03.10.2026 இரவு, மேற்படி குயில்தோட்டம் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் பணியில் இருந்தபோது, சாந்தோம் மெயின் ரோட்டில் சத்தம் கேட்டு, அங்கு சென்று பார்த்தபோது கார் ஓட்டுநருக்கும், அதில் வந்த பயணிக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டு வந்ததாகவும், அப்போது அமல்ராஜ் இருவரையும் சமாதானம் செய்ய முற்பட்ட போது, கார் ஓட்டுநர், தகாத வார்த்தைகள் பேசி, கார் சாவியை வைத்து அமல்ராஜை தாக்கி, கொலை மிரட்டல் விடுத்து, தப்பிச் சென்றதாகவும், மேற்படி தன்னை தாக்கிய கார் ஓட்டுநர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு அமல்ராஜ், இ-1 மயிலாப்பூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

இ-1 மயிலாப்பூர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட கார் ஓட்டுநர் ரஞ்சித்குமார், வ/30, புதுவிளாங்குடி, மதுரை மாவட்டம் என்பவரை நேற்று முன்தினம் (04.10.2026) கைது செய்தனர். அவரிடமிருந்து குற்றச் செயலுக்கு பயன்படுத்திய கார் சாவி மற்றும் கார் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரி ரஞ்சித்குமார் மீது ஏற்கனவே ஒரு வழக்கு உள்ளது தெரியவந்தது.



கைது செய்யப்பட்ட எதிரி ரஞ்சித்குமார் விசாரணைக்குப் பின்னர் நேற்று முன்தினம் (04.10.2026) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11, SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்